# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

19.08.2020 புதன்கிழமை


# முள்ளியவளை முறிப்பில் காணி அபகரிப்பு

## வனவளத் திணைக்களம் மீது உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஓகஸ்ட் 19

முல்லைத்தீவு, முள்ளியவளை முறிப்பில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரிக்க வனவளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. நேற்றுக் காணிகளை அளவீடு செய்ய வனவளத் திணைக்களத்தினர் எடுத்த நடவடிக்கை, காணி உரிமையாளர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது. 2

## சஜித், மைத்திரி இரகசிய பேச்சு?

கொழும்பு, ஓக.19

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே தொலைபேசி கலந்துரையாடல் நடந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தொலைபேசி கலந்து 2

## கிணற்றில் தவறி விழுந்து மூதாட்டி சாவு

கொழும்பு, ஓக.19

கிணற்றில் தவறி விழுந்த மூதாட்டி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அச்சுவேலி தோப்புப் பகுதியில் இன்று காலை நடந்துள்ளது. விக்னேஸ்வரன் சிவபாக்கியம் (வயது 2

## புதிய சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம்

கொழும்பு, ஓக.19

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகின்றது. அதில் சபாநாயகர் தெரிவு இடம்பெற்றபின்னர் புதிய சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்களின் முதலாவது கூட்டம் சபாநாயகர் அலுவலகத்தில் நடக்கவுள்ளது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளுமே இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். அதில் 2

## மின் பயன்பாட்டில் சிக்கனம் அவசியம்

### மின்சார சபை வேண்டுகோள்

கொழும்பு, ஓக.19

அவசியமற்ற மின் உபகரணங்களை காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை பயன்படுத்தவேண்டாம் என்று இலங்கை மின்சார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. 2

## அதி உயர் சபையின் கன்னி அமர்வு நாளை

கொழும்பு, ஓக.19

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நாளை நடைபெறவுள்ளது. முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் அமர்வில் முதல் தெரிவாகப் புதிய சபாநாயகர் நியமிக்கப்படுவார். மஹிந்த யாப்பா அபேவர்தன புதிய சபாநாயகராக ஏகமனதாக தெரிவு செய்யப்படுவார் எனவும் 2




## புதினம் தெரியுமோ

நாடு முழுதும் இன்னும் சில நாட்களுக்கு சுழற்சி முறையில் சில மணிநேர மின்வெட்டு நடைமுறையில் இருக்கப் போகின்றது. ஆனால் இந்த மின்வெட்டு பல சந்தேகங்களை மக்களிடையே எழுப்பியுள்ளது. கடந்த திங்கட்கிழமை திடீரென மின்வெட்டால் நாடே பதறிய போது, கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறால், மத்திய 2

## சபாநாயகர் சிக்கல் இல்லை கோத்தா உரைக்கு விளக்கம்

### ஐக்கிய மக்கள் சக்தி முடிவு

கொழும்பு, ஓக.19

ஆளும் கட்சியால் முன்மொழியப்படும் சபாநாயகரை வழிமொழிந்து ஏற்றுக்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது. அதில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. ஆளுங் கட்சி பெரும்பான்மைப் 2

## பால்ராஜின் சகோதரர் காலமானார்

முல்லைத்தீவு, ஓக.19

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜின் மூத்த சகோதரர் கந்தையா சந்திரசேகரம் உயிரிழந்துவிட்டார். இவருக்கு வயது 69.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் வசித்து வந்த சந்திரசேகரம் நோயால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். நாளை கொக்குத்தொடுவாயில் அமைந்துள்ள, அவருடைய இல்லத்தில் இறுதிக் கிரிகைகள் இடம்பெற்று, பின்னர் கொக் 2

## மாகாணத் தேர்தலில் மெகா கூட்டணி!

### ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்

கொழும்பு, ஓக.19

ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக்கொண்டு பரந்துபட்ட கூட்டணியின் கீழ் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது 2

## 19ஐ தூக்கி எறிவதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக.19

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்து செய்வதற்கும், 20 ஆவது திருத்தத்தை உருவாக்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் புதிய அரசின் கன்னி அமைச்சரவை கூட்டம் இன்று காலை இடம்பெற்றபோதே இந்த 2

## புதினம் தெரியுமா?

மின் பரிமாற்ற வலையமைப்பு கட்டுப்பாட்டை இழந்ததாலேயே இந்த மின் துண்டிப்பு ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் அன்றைக்கும் வெறும் 2 மணித்தியாலங்களில் வழமைக்கு திரும்பிவிடுமென அரசால் சொல்லப்பட்ட மின் விநியோகம் இரவு 9 மணிக்கே சீரானது. ஆனால் அது கூட தற்காலிகச் சீராக்கமே என்பது இன்னும் சில நாட்களுக்கு மின்வெட்டு தொடரப்போவதாக அறிவிக்கப்பட்டதில் இருந்து புலனாகியுள்ளது.

அதைவிட இன்னொரு செய்தியும் புருவத்தை உயரச் செய்துள்ளது. முதலில் கெரவலப்பிட்டியவில் கோளாறு என்று சொன்ன அரசு இப்போது நுரைச்சோலையில் கோளாறு என இன்னொரு கதையை அவிழ்த்து விட்டுள்ளது. அப்படியானால் உண்மையில் எங்குதான் கோளாறு? சில உள்ளக வட்டாரங்களின் தகவல்படி, மின்சாரசபை ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி ஒரு பணிப்புறக்கணிப்புக்கு ஏற்பாடு செய்ததாகவும்,ஆனால் அதனை அரசு முளையிலேயே கிள்ளியெறிய முற்பட்டதால், இப்படி வலிந்து மின் உற்பத்தி நிலையங்களில் கோளாறை ஏற்படுத்தி அரசுக்கு மறைமுக நெருக்கடி கொடுப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அதேவேளை, தனியார் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை தங்கள் சார்பானவர்களுக்கு மாற்றுவதற்கும் அரசு இப்படி ஒரு நாடகமாடுவதாகவும் இன்னொரு தரப்பு சொல்கிறது. இவையெல்லமே ஊகங்கள் மாத்திரமே, ஆனால் நெருப்பில்லாமல் புகையாது தானே. என்னவோ அவர்கள் தங்களுக்காக ஆடும் பந்தாட்டத்தில் பாதிக்கப்படுவதென்னவோ அப்பாவி மக்களல்லவா?

– பட்சி

## மாகாணத் தேர்தலில்...

என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் ஜே.சி. அலவதுவல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ரணில் மற்றும் சஜித் அணிகளின் சங்கமம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கி குறுகிய காலப் பகுதிக்குள் 54 ஆசனங்கள் கிடைத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முதல் சுற்றில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம். அடுத்தடுத்த சுற்றுகளில் பலமான அணியாக களமிறங்கி வெற்றிபெற திட்டமிட்டுள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஓர் கூட்டமைப்பு. அதில் கட்சிகள் இணையலாம். ஐக்கிய தேசியக்கட்சி இணைந்தால்கூட அந்தக் கட்சியையும் இணைத்துக்கொண்டு பரந்தப்பட்ட கூட்டணியின் கீழ் தேர்தலை சந்திக்கலாம். அது மேலும் வலுவாக இருக்கும். எனவே, ஐ.தே.க. எம்முடன் இணைவதை நாம் வரவேற்போமே தவிர ஒருபோதும் எதிர்க்கமாட்டோம்- என்றார்.(எ-44)

## பால்ராஜின்...

குத்தொடுவாய் இந்துமயானத்தில் அவருடைய உடல் தகனம் செய்யப்படவுள்ளது.

அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் பங்கேற்றிருந்தார்.

இவர் தமிழர்களது பூர்வீக பகுதிகளான கொக்கிளாய்,கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மற்றும் மணலாறுப் பகுதிகளில் இடம்பெறும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தவராவார். (எ-246)

# முள்ளியவளை...

“சுமார் 45 பேருக்குச் சொந்தமான காணிகளை எல்லைப்படுத்த வனவனத் திணைக்களத்தின் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தக் காணிகளில் வாழைத் தோட்டங்கள், தென்னந்தோட்டங்கள், பயன்தரு மரங்கள் நடப்பட்டு, அவற்றில் இருந்து பயன்பெறும் காலத்தை எட்டியுள்ளன. இப்போது காணிகளை எல்லைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையினரும் அதற்கு அனுமதி கொடுத்துள்ளனர்” என்று காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

1990ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ளனர். காணிகளுக்கான உரிமப்பத்திரங்கள், சான்றுத் துண்டுகளை வைத்துள்ள இவர்கள் தங்களுக்குச் சொந்தமான காணிகளில் பயன்தரு மரங்களை நட்டுப் பராமரித்து வந்துள்ளனர்.

இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் சிலருக்கு எதிராக வனவனத் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் காணி பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் ஆவணங்களைக் கொடுத்துப் பதிவு செய்யப்பட்டபோதும், அந்தக் காணிகளை மக்களுக்கு அனுமதிக்கப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாகக் காணி உரிமையாளர்களால் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தானுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும், மாவட்ட அபிவிருத்திக் குழுவில் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கும்வரையில் காணி அளவீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-19)

# அதி உயர் சபையின்...

ஆளுங்கட்சிவசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருப்பதால் பதவிகளுக்கு போட்டி நிலவாது எனவும் அறியமுடிகின்றது. அதன் பின்னர் சபாநாயகர், குழுக்களின் பிரதி தவிசாளர் ஆகிய பதவிகளுக்கான தேர்வுகள் இடம்பெறும். உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் சபை அமர்வுகள் சபாநாயகரால் ஒத்திவைக்கப்படும். பின்னர் பிற்பகல் 3 மணிக்கு நாடாளுமன்றம் மீண்டும் கூடும்.

இதன்போது அரசின் கொள்கை விளக்க உரையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ முன்வைக்கவுள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே நாடாளுமன்றக்கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-44)

## சபாநாயகர் சிக்கல்...

பலத்துடன் இருப்பதாகவும், சபாநாயகர் என்பவர் பொதுவாக் செயற்பட வேண்டியவர் என்பதால் ஆரம்பத்திலேயே அவருக்கு எதிர்ப்பை வெளியிடாமல், ஆளுங்கட்சியால் முன்வைக்கப்படும் பெயரை எதிர்ப்பின்றி வழிமொழிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவால் முன்வைக்கப்படும் கொள்கை விளக்க உரை மீது விவாதம் கோருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது.

அதேவேளை, 8 ஆவது நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயரை ரணில் விக்கிரமசிங்க முன்மொழிய, அதை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா வழிமொழிந்திருந்தார். (எ-44)

## மின்....

லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நாட்டில் சுழற்சிமுறை மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் தினமும் இரண்டே முக்கால் மணி நேரம் மின் துண்டிக்கப்படுகின்றது.

இந்த நெருக்கடி நிலை வழமைக்கு திரும்பும் வரை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று மின்சார சபை பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# 19தை தூக்கி எறிவதற்கு...

முடிவு எட்டப்பட்டுள்ளது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசிமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவது தொடர்பான அமைச்சரவை அறிக்கை இன்று நடைபெறும் அமைச்சரவையின் முதல் கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி முன்பு தெரிவித்தார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை ரத்துசெய்து அதை 20ஆவது திருத்தத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

“நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் 19ஆவது திருத்தத்தின் உட்பிரிவுகள் அகற்றப்பட்டு திருத்தப்படும். அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய 20ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துவோம் என்று நம்புகிறோம்” என்றார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கான வரைவு திட்டத்தின் கீழ், ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருக்கும், அதே நேரத்தில் ஜனாதிபதி தேர்தலில் ஒருவர் இரண்டு முறை மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்படுவார். தற்போதுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர், 20 ஆவது திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளை பாதிக்காது. அது தொடர்ந்து செயற்படும் என்று தெரிவித்துள்ளார். இதேவேளை 2020 ஆம் ஆண்டுக்கான மீதமுள்ள மாதங்களுக்கான அரச நிதியை ஒதுக்கும் இடைக்கால கணக்க றிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

## சஜித், மைத்திரி...

ரையாடலில் தங்களுடன் இணைந்து செயற்படும்படி மைத்திரிக்கு சஜித் அழைப்பு விடுத்திருந்தார் என்று சிங்கள மொழி இணையத்தளங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுபற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கி யஸ்தர்களிடம் வினவியபோது, அவர்கள் இருவருக்கும் இடையே எந்தவொரு கலந்துரையாடலும் இடம் பெறவில்லை என்று கூறினார்.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிர்க் கட்சியுடன் இணைவதற்கான எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.(எ)

## கிணற்றில் தவறி...

77) என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார். காலையில் முகம் கழுவுவதற்காக இவர் கிணற்றுக்குச் சென்றுள்ளார். அப்போது அவர் தவறிக் கிணற்றுக்குள் விழுந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-25)

## 9ஆவது...

அடுத்தகட்ட சபை நடவடிக்கைகள் தொடர்பாகவும், நிகழ்ச்சி நிரல் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்கு 6 அரசியல் கட்சிகளே அங்கம் வகித்தன. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இலங்கைத் தமிழரசுக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியனவே அங்கம் வகித்தன. கடந்த பொதுத் தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 15ஆக அதி கரித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, எமது சக்தி மக்கள் கட்சி ஆகியவற்றுக்குத் தலா ஒவ்வொரு தேசியப்பட்டியல் கிடைத்திருந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி, இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, எமது சக்தி மக்கள் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா சுதந்தி ரக்கட்சி, முஸ்லிம் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே இம்முறை நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றன. (எ-44)




# 60 வயது முதியவர் வெட்டி கொலை

கம்பஹா, ஒக.19

கம்பஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யக்கல வீதி பண்டார வத்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அந்த நபரின் வீட்டிலிருந்து வெட்டப்பட்ட நிலையில் சடலம் நேற்று மீட்கப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 60 வயதுடைய நபரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ரி1)

# நாட்டின் உற்பத்தியில் ஓரளவு முன்னேற்றம்

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஒக.19

கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நாட்டின் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகள் கடந்த ஜூன் மாதத்தில் ஓரளவு முன்னேற்றகரமான நிலையைப் பதிவுசெய்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




இது தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உற்பத்தி மற்றும் சேவைத்துறை இரண்டினதும் கொள்வனவு முகாமைச் சுட்டெண்கள் கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஓரளவிற்கு இயல்புநிலைக்குத் திரும்பியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலினால் வியாபார நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிப்படைந்திருந்த நிலையில் கொள்வனவு முகாமைச் சுட்டெண்ணில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றமானது தயாரிப்பு செயற்பாடுகள் கொவிட் 19 தொற்றுக்கு முன்னரான மட்டத்தை நோக்கிச்செல்வதை அறியமுடிகின்றது. உற்பத்தி கொள்வனவு முகாமைச்சுட்டெண் கடந்த ஜூலை மாதம் 64.6 ஆக பதிவாகியிருப்பதுடன், இதற்கு புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தித் துணைச் சுட்டெண்களின் விரிவடைதலே முக்கிய காரணமாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த ஜூலை மாதத்தில் சேவை கொள்வனவு முகாமைச்சுட்டெண் 51.4 ஐ அடைந்ததன் ஊடாக, சேவைகள் துறை தொடர்ந்து இரண்டாவது மாதமாகவும் விரிவடைந்திருக்கிறது.

எனவே கொவிட் 19 வைரஸ் தொற்றினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த சேவைகள்துறை ஜூன் மாதத்தில் குறிப்பிடத்தக்களவான மீட்சியைப் பதிவுசெய்திருப்பதுடன் புதிய வியாபாரங்களில் ஏற்பட்ட விரிவாக்கம் இதற்கான பிரதான காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ரி1)




# இரவுநேர சாரதிகளுக்காக பொலிஸாரால் சிற்றுண்டிகள்

கொழும்பு, ஒக.19

இரவு நேரத்தில் வாகனம் ஓட்டும் சாரதிகளுக்கு, தனமல்வில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சூடான தேநீரும் உண்பதற்கு பிஸ்கெட் வகைகளும் வழங்கப்பட்டன.

இரவு நேரங்களில் சாரதிகள் விழிப்புடன் வாகனங்களைச் செலுத்துவதற்கும், விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான நோக்கத்திலேயுமே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நடவடிக்கை ஏனைய பிரதேசங்களிலும் விபத்துக்களை ஏற்படுத்தாமல் விழிப்புடன் வாகனங்கள் செலுத்த வேண்டும் என்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ரி2)

# பேருந்துப் பயணி திடீர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக.19

மொனராகலையில் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் திடீரென நபர் உயிரிழந்துள்ளார். 44 வயதுடைய உயிரிழந்த நபரின் பையில் இருந்து ஒரு கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என தனமல்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெலிஓயவில் இருந்து தனமல்வில வரை பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச்

சொந்தமான பேருந்தில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு அருகில் பையை சோதனையிட்ட போது கஞ்சா பொதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த நபரின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ரி1)

# சர்ச்சைக்குரிய ஆடை வழக்கு; இஸ்லாமிய பெண் விடுவிப்பு

கொழும்பு, ஒக.19

சர்ச்சைக்குரிய ஆடை அணிந்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இஸ்லாமிய பெண் ஒருவருக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்கை பொலிஸார் மீளப்பெற்றுக் கொண்டுள்ளனர். இதனையடுத்து அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்தும், வழக்கிலிருந்தும் மேற்படி பெண்ணை விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கு மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.பி. லக்ஷ்மன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்ட மா அதிபரின் அறிவுரைக்கு அமைவாக, இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாதென்றும், அதனால் வழக்கை மீளப் பெற்றுக் கொள்கிறோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும், வழக்கிலிருந்தும் மேற்படி பெண்ணை விடுவிப்பதாக நீதிவான் அறிவித்துள்ளார். கண்டி கொலங்கொட எனும் பிரதேசத்தைச் சேர்ந்த மஸாஹிமா எனும் பெண், தர்மச் சக்கரம் அச்சிடப்பட்ட ஆடையை அணிந்திருந்தார் என்றும், அதன் மூலம் அவர் பௌத்த மதத்தை அவமதித்து விட்டார் எனவும் தெரிவித்து கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். கடந்த ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட அந்தப் பெண், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியமையை அடுத்து 14 நாள்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி1)

# விளையாட்டு மைதானத்தின் களஞ்சிய அறையில் தீப்பரவல்

மட்டக்களப்பு, ஒக.19

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட கல்லடி, உப்போடையிலுள்ள சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தின் களஞ்சிய அறையில் நேற்று திடீரென தீப்பரவல் ஏற் பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை என்று அந்த விளையாட்டு மைதானத்தினை நிர்வகிக்கும் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

களஞ்சிய அறையிலிருந்த விளையாட்டுக்குரிய பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

## புவனேகபாகு மன்னனின் அரசவை உடைப்பு:

# மேயருக்கு எதிரான வழக்குச் செலவுகளை குருநாகல் நகர சபையிடம் பெற யோசனை

குருநாகலிலுள்ள புவனேகபாகு மன்னனின் அரசசபை மண்டபம் உடைக்கப்பட்டமை தொடர்பில் குருநாகல் மேயருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குக்கு செலவாகும் பணத்தை குருநாகல் நகரசபையிடம் இருந்து பெற்றுக்கொள்ள யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. குருநாகல் நகரசபைக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கள் இடம்பெற்ற நிலையிலேயே மேற்குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குருநாகல் நகர சபையின் 2,180,000 ரூபா நிதியை வழக்கு விசாரணைகளுக்காக செலவிடும் யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த யோசனைக்கு 13 உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்; 3 உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் இரண்டு உறுப்பினர்களும், குருநாகல் நகர சபையின் முன்னாள் தலைவருமே இந்த யோசனைக்கு எதிப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)





*வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் செல்லும் தெற்கு புற வீதி வளைவு, கோயில் வீதியில் கைலாச பிள்ளையார் கோவிலடியில் அமையவுள்ளது. இந்த வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நடும் ஆகம வழிபாடு இன்று காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது. இந்த வழிபாட்டில் நல்லூர் சிவாச்சாரியார், ஆன்மீக பெரியோர்கள், ஆலயத் தொண்டர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ரி3)*

# மீண்டும் கொரோனா பரவும் அபாயம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.19

இந்தியாவில் கொரோனா தொற்றின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்ற நிலையில், இந்தியக் கடற்றொழில் சமூகத்துடனான தொடர்பு காரணமாக இலங்கையின் கடலோரப் பகுதிக்கு கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை இலங்கையின் கடற்றொழில் சமூகத்திடமிருந்து கொரோனா தொற்று எதுவும் பதிவாகவில்லை எனினும், இந்தியாவின் மோசமான நிலைமை இலங்கைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

சட்டவிரோத கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றில் இலங்கையர்கள் இந்தியர்களுடன் தொடர்புகளைப் பேணுகின்றனர்.

கடத்தல் போதைப்பொருள்களைக் கைப்பற்றும் போது பல கடற் றொழிலாளர்கள் கைது செய்யப்படுவதால் இது ஒரு பரவலான வணிகமாக மாறியுள்ளது.

அண்மையில் இந்தியாவில் இருந்து மஞ்சளை சட்டவிரோதமாக படகுகளில் கொண்டு வந்தமைக்காக பல கடல் தொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தப் பின்னணியில் இலங்கையின் கடற்றொழிலாளர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் மேலும் எச்சரித்துள்ளது. (ரி2)

## பளை, தருமபுரம் பகுதிகளில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, ஓக.19

பளை மற்றும் தருமபுரம் பொலிஸ் பிரிவுகளில் நேற்றையதினம் வெடிக்காத வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மக்கேணி பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியை ஜேசிபி இயந்திரத்தின் மூலம் துப்புரவு செய்தபோது வெடிக்காத நிலையில் இருந்த 11 மோட்டார் குண்டுகள் மற்றும் 4 கைக்குண்டுகள் என்பன அடையாளம் காணப்பட்டன. பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அந்த இடத்தை அடையாளப் படுத்தினர்.

இதேவேளை, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியைத் துப்பரவு செய்தவேளை விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவை தொடர்பில் நீதிமன்றில் அனுமதி பெற்று, அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி3-6)




மருதங்கேணி பிரதேச செயலக வெளிக்களப் பணியாளர்களுக்கு கொரோனா பரிசோதனை நேற்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களுடன் தொடர்புடைய மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வெளிக்களப் பணியாளர்கள் 30 பேருக்கு இம் மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, மாதிரிகள் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ரி3-422)

## நேற்று மாத்திரம் 3,518 பி.சி.ஆர்.பரிசோதனைகள்

கொழும்பு, ஓக.19

நாட்டில் நேற்று மாத்திரம் 3,518 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் ஒரே நாளில் பதிவுசெய்யப்பட்ட அதிகமான பி.சி.ஆர்.பரிசோதனை இதுவாகும். இது வரை நாட்டில் மொத்தமாக 195,025 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ரி1)

## சுமத்ராவில் நிலநடுக்கம்

கொழும்பு, ஓக.19

இந்தோனேஷியாவின் தெற்கு சுமத்ராவில் நேற்று 6.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் (ஈ.எம்.எஸ்.சி) தெரிவித்துள்ளது. 10 கி.மீ (6.21 மைல்) ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது ஈ.எம்.எஸ்.சி. தெரிவித்துள்ளது. இந்த நில நடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

இந் நிலையில் இந்த நிலநடுக்கம் தொடர்பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நிலநடுக்கம் காரணமாக இலங்கைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை எனக் கூறியுள்ளது. (ரி1)

## பாதுகாப்பான விமான சேவை: 13 நாடுகளுடன் இந்தியா பேச்சு

பாதுகாப்பான சர்வதேச விமான போக்குவரத்து தொடர்பாக இலங்கை உட்பட 13 நாடுகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது என அந் நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுடன் ஏற்கனவே இந்த விமானப் பயண ஒப்பந்தங்களை இந்தியா மேற்கொண்டுள்ளது. இந் நிலையில் அதன் அண்டை நாடுகளான இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் எயார் பபிள்ஸ் (Air bubbles) எனப்படும் இரு தரப்பு விமானப் போக்குவரத்து ஒப்பந்த திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது என இந்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார். இந்திய மத்திய அரசின் வந்தே பாரத் மிஷனின் ஒரு பகுதியாக, வெளிநாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களைத் தாயகம் அழைத்து வரும் முயற்சியில், 13 நாடுகளுடன் இருதரப்பு எயர் பப்பிள்ஸ் எனப்படும் இவ் விமானப் போக்குவரத்து திட்டத்தை செயற்படுத்த இந்தியா பேச்சு நடத்தி வருகிறது. ஆஸ்திரேலியா, இத்தாலி, ஜப்பான், நியூசிலாந்து, நைஜீரியா, பஹ்ரைன், இஸ்ரேல், கென்யா, பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சிங்கப்பூர், தென் கொரியா மற்றும் தாய்லாந்து ஆகியவை இதில் அடங்குகின்றன என்று பூரி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (ரி1)

## 421 இலங்கையர் நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஓக.19

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 421 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான ஈ.கே.648 என்ற விமானத்தின் மூலமாக 17 இலங்கையர்கள் அதிகாலை 1.30 மணிக்கு பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். கட்டாரிலிருந்து கட்டார் ஏயர்வேஸ் விமான சேவைக்குச் சொந்தமான QR668 என்ற விமானத்தில் 394 இலங்கையர்கள் அதிகாலை 1.50 மணிக்கு பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இவர்களில் சுமார் 210 பேர் பல்வேறு விமான சேவைகளில் பணியாற்றும் விமானக் குழு உறுப்பினர்கள் ஆவார்கள். லண்டன், ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவையின் யு.எல் 504 மூலமாக 10 இலங்கையர்கள் பண்டாரநாயக்க விமான நிலையத்தை அதிகாலை 5.10 மணியளவில் வந்தடைந்துள்ளனர். (ரி1)

# பால் உற்பத்தியை ஏற்றுமதி மட்டத்துக்கு கொண்டுவருவதற்கு கவனம் செலுத்தப்படும்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஓக.19

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் இந்த நாட்டின் பால் உற்பத்தியை, நாட்டின் பால் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு மேம்படுத்துவதற்கும் அதை நுகர்வுக்கு அப்பால் ஏற்றுமதி மட்டத்துக்கு கொண்டு வருவதற்கும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பால் உற்பத்தித்துறையுடன் தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அத்துறை சார்ந்த அரச நிறுவன தலைவர்களுடன் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி செயலணி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதுடன்,



அதன்படி உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பெரிய எவிலான பால் பண்ணைகள் மற்றும் சிறிய அளவிலான பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பால் தேவை 1200 மில்லியன் லீற்றராகும். தற்போது உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவு 420 மில்லியன் லீற்றராகும். எஞ்சிய தேவையான பாலின் அளவு 780 மில்லியன் லீற்றர் என்ற போதிலும், திரவப் பால் பயன்பாட்டுக்கு மக்களை பழக்கப்படுத்தினால், மேலும் 400 மில்லியன் லீற்றர் பாலை கொண்டு உள்ளூர் தேவையை பூர்த்தி செய்ய முடியும். 1 கிலோ கிராம் பால் மாவை உற்பத்தி செய்வதற்கு சுமார் 8 லீற்றர் திரவ பால் தேவைப்படுகிறது. அதன்படி, 1 கிலோகிராம் பால் மாவிலிருந்து தயாரிக்கக்கூடிய பால் கோப்பைகளின் அளவை விட 8 லீற்றர் திரவ பாலிலிருந்து தயாரிக்கக்கூடிய பால் கோப்பைகளின் அளவு மிக அதிகம். பால் விலை, பால் பசுக்களை இறக்குமதி செய்தல், புல்வெளிகளைப் பாதுகாத்தல், மக்காச்சோளம் சாகுபடி செய்தல் மற்றும் அதற்கான நிலம் ஒதுக்கீடு செய்தல், மக்காச்சோளம் சாகுபடியின் வெற்றிக்கு பயனுள்ள விதைகளை இறக்குமதி செய்து உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மக்காச்சோளத்தின் உற்பத்தித்திறனை ஒரு ஹெக்டேயருக்கு 3.8 மெட்ரிக் தொன்னிலிருந்து 7 மெட்ரிக் தொன் வரை உயர்த்த வேண்டும். அதன்படி, எதிர்வரும் பருவத்தில் பால் பண்ணையாளர்களுக்கு அவசியமான மக்காச்சோளம் பயிரிடத் தேவையான நிலங்களை விடுவிப்பது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ரி2)





வடமாகாண இளைஞர் வலுவூட்டல் வலையமைப்பின் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிநெறிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ் பொதுநூலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி3-27)

## சிங்கராஜ பிரதேச சாலைத் திட்டம் பாதிப்பு இல்லை

கொழும்பு, ஓக.19

நெடுஞ்சாலை அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட சிங்கராஜ பிரதேசத்தின் நெலுவ லங்காகம சாலைத் திட்டத்தினால் சூழல் உணர்திறன் கொண்ட 1.1 கி.மீற்றர் பரப்பளவில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இந்த திட்டத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வனவிலங்கு அமைச்சருக்கு ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளார். சுமார் 18 கி.மீ நீளமுள்ள கிராமப் புறச் சாலையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று அந்தப்பகுதியில் வசிப்பவர்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வரலாற்றுச் சின்னமான சிங்கராஜ வனப்பகுதியில் வீதி அமைப்பு மேற்கொள்ளப் படுகிறது என்று ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ நிறுவனத்துக்கு இலங்கையின் சுற்றாடல் அமைப்பு ஒன்று முறையிட்ட நிலையிலேயே இந்தக் கருத்தை அமைச்சு வெளியிட்டுள்ளது. (ரி1)

## சலூன்காரராக மாறிய அதிபர்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, ஓக.19

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்தில் அதிபர் ஒருவர் தலைமுடிவெட்டுபவராக மாறிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பின்தங்கிய கட்டுமுறிவு கிராமத்திலுள்ள, கட்டுமுறிவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஜே.ஜீவனேஸ்வரன் தமது பாடசாலை மாணவர்கள் ஒரு வார காலமாக பாடசாலைக்கு வரவில்லை என்பதால் வீடு தேடிச் சென்று காரணம் கேட்டபோது முடிவெட்டவில்லை. அதனால் பாடசாலைக்கு வரவில்லை என்று கூறியுள்ளனர். அத்தோடு முடி வெட்டுவதால் 20 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கதிரவெளி கிராமத்திலுள்ள சலூனுக்குப் போக வேண்டும். அதற்கு வசதியுமில்லை என்று மாணவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

பாடசாலை வருவதற்கு தலைமுடி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று எண்ணிய நல்லுள்ளம் கொண்ட அதிபர் தமது கடமைக்கு அப்பால் தலைமுடிவெட்டுபவராக மாறியுள்ளார். அவர் மனித நேயப் பணியைச் செய்துள்ளார். (ரி2-150)



# மஞ்சள் தட்டுப்பாடு ஒன்றரை ஆண்டுக்குள் நிவர்த்தி

கொழும்பு, ஓக.19

நாட்டில் மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை ஒன்றரை வருடங்களுக்குள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனசிறுதோட்ட பயிர் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

நாட்டில் மஞ்சள் செய்கையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் மஞ்சள் காணப்படுகிறதா? இல்லையா? என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவருகின்றது. விலையை அதிகரிக்கும் வரையில் மஞ்சளை மறைத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும், தற்போது அதிக விலையில் மஞ்சள் விற்பனை செய்யப்படுவதாகவும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகள் குறித்து சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவித்துள்ளேன்- என்றார்.(ரி2)





வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ஐ)



# இரு கிராமங்களை தத்தெடுத்தார் நடிகை ஜக்குலின்

பிரபல நடிகை ஜக்குலின் பெர்னாண்டஸ் தனது பிறந்த நாளையொட்டி மராட்டியத்தில் உள்ள பதார்தி, சக்கூர் ஆகிய 2 கிராமங்களைத் தத்தெடுத்துகின்றேன் என அறிவித்துள்ளார். இலங்கை நடிகையான ஜக்குலின் இந்தி, தெலுங்கில் அதிக படங்களில் நடித்துள்ளார்.

கிராமங்களைத் தத்தெடுத்தது பற்றி ஜக்குலின் பெர்னாண்டஸ் தெரிவிக்கும்போது, “கொரோனாத் தொற்றினால் மக்கள் பலர் பாதித்துள்ளனர். இது அனைவருக்கும் கஷ்டமான காலம். பலர் அடிப்படை தேவைகளுக்காகப் போராடுகிறார்கள்.

மக்களுக்கு நம்மால் ஏதேனும் உதவிகள் செய்ய வேண்டும் என்ற நோக்கில் இரண்டு கிராமங்களை தத்தெடுத்து உள்ளேன்” எனத் தெரிவித்துள்ளார். இந்த கிராமங்களில் வசிப்பவர்களுக்கு ஜக்குலின் ஊட்டச்சத்து உணவுகள் வழங்குதல், வேலை வாய்ப்பு பயிற்சி, சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல பணிகளை செய்ய உள்ளார். (ரி1)





# வவுனியாவில் கட்டாக்காலி மாடுகளால் விபத்துக்கள் அதிகரிப்பு

வவுனியா, ஓக.19

வவுனியா நகரப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் நகரின் அழகு சீர்குலைவதுடன், தினமும் போக்குவரத்துக்கும் நெரிசலும் ஏற்படுகின்றன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, வவுனியா நகரம், வவுனியா - மன்னார் பிரதான வீதி, பட்டாணிச்சூர், வேப்பங்குளம், குருமன்காடு சந்தி போன்ற பகுதிகளில் நடு வீதிகளில் கால்நடைகள் நிற்கின்றமையால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இதேவேளை, கட்டாக்காலி மாடுகளினால் கடந்த மாதத்தில் மாத்திரம் 10க்கு மேற்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த நகரசபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி3-18)

## வவுணதீவில்
# கொங்கிறீட் வீதிக்கான வேலைத்திட்டம் ஆரம்பம்

வவுணதீவு, ஓக.19

வவுணதீவில் கொங்கிறீட் வீதிக்கான ஆரம்பகட்ட வேலையை உத்தியோக பூர்வமாக தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகத் தொழிற்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காயான்மடு கிராம சேவகர் பிரிவின் பிள்ளையார் கோயில் வீதியை கொங்கிறீட் வீதியாக செப்பனிடுவதற்கான ஆரம்பக் கட்ட பணிகளையே அவர் ஆரம்பித்துவைத்துள்ளார்.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான இரண்டு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், சுமார் 170 மீற்றருக்கான வீதியாக இவ் வீதி புனரமைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வானது காயான்மடு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.தேவரூபன் தலைமையில் இடம்பெற்றது. (ரி2-46)

# தம்பலகாமத்தில் வியாபார சந்தையும் கண்காட்சியும் திறந்து வைப்பு

தம்பலகாமம், ஓக.19

சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் “பிரதேச வியாபார சந்தையும் கண்காட்சியும்” இன்று திறந்து வைக்கப்பட்டன. இதில் கைப்பணி பொருள்கள், மட்பாண்ட உற்பத்திகள் எனப் பல வகையான பொருள்கள் சந்தைப்படுத்தப்பட்டிருந்தன. கிராமியப் பொருள்களின் விற்பனை ஊக்குவிப்பை மேம்படுத்தவும் அதனை விரிவுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ரி2-40)

# சுயதொழில் மேம்படுத்தல் பயிற்சி பட்டறை

மாங்குளம், ஓக.19

சுயதொழில் மேம்படுத்தல் பயிற்சி வகுப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாங்குளம் உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உயிரிழை அமைப்பின் பயனாளிகள் இப் பயிற்சிப் பட்டறைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அபிவிருத்திக்கான உதவி ஊக்க இலங்கை மையத்தின் அனுசரணையுடன் டயகோனியா நிறுவனத்தின் ஊடாக உயிரிழை அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட சுயதொழில் சுழற்சி முறையிலான கடன் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் தொழிலை எவ்வாறு மேம்படுத்தவேண்டும் என்பதற்கு அமைவாக இந்தப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இந்தப் பயிற்சி பட்டறை வேல்ட் விசன் நிறுவனத்தைச் சேர்ந்த ஜெயால்ட் அன்ரனியால் தொகுத்து வழங்கப்பட்டது. (ரி3-222)





கிளிநொச்சி நகரின் ஏ9 வீதியின் இரு பக்கங்களிலும் இருந்த பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய கழிவுகள் இன்று கரைச்சி பிரதேச சபை பணியாளர்களால் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன. இந்தச் செயற்பாட்டில் தவிசாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ரி3-222)

# தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை; மீண்டும் திறக்க அனுமதி மறுப்பு

## சென்னை உயர்நீதிமன்று அதிரடித் தீர்ப்பு
## மக்கள் வெடிகொளுத்திக் கொண்டாட்டம்

சென்னை, ஓக.19

இந்தியாவில் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்கச் சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளது. இதையடுத்து மக்கள் வெடி கொளுத்திக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

'வேதாந்தா குரூப்' நிறுவனம் சார்பில் துாத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது.

ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் புகையால், பொதுமக்களுக்கு உடல் நலப் பாதிப்பு ஏற்படுகிறது. சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. நிலத்தடி நீரில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என, ஆலைக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட் டன. ஆலையை மூடக் கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 13 பேர் பலியாகினர். இதையடுத்து, ஆலையை மூடி, 'சீல்' வைக்குமாறு கடந்த 2018 மே மாதம் 28 ஆம் திகதி தமிழக



அரசு உத்தரவிட்டது. அதன்படி, ஆலைக்கு சீல் வைக்கப்பட்டது.

மூடப்பட்ட ஆலையை திறக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வேதாந்தா நிறுவனம் மனுத் தாக்கல் செய்தது. ஆலையைத் திறக்கக் கூடாது என, ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோ உள்ளிட்டோரும் மனுக்கள் தாக்கல் செய்தனர்.

பல நாள்களாக இடம்பெற்று வந்த இவ்வழக்கின் தீர்ப்பை 2020 ஜனவரி 8 இல் திகதி குறிப்பிடாமல் நீதிபதிகள் ஒத்திவைத்தனர். இந் நிலையை நேற்று 815 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையைத் திறப்பதற்கான தடை தொடரும். ஆலையை மூடிய தமிழக அரசின் உத்தரவு செல்லுபடியாகும் எனக்கூறி, வேதாந்தா நிறுவனத்தின் மனுவைத் தள்ளுபடி செய்தனர். உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யும் வரை உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற வேதாந்தா நிறுவனத்தின் கோரிக்கையையும் நீதிபதிகள் நிராகரித்தனர்.

ஸ்டெர்லைட் ஆலை வழக்கில் தீர்ப்பு வழங்கப்படுவதை முன்னிட்டு, தூத்துக்குடியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. தீர்ப்பைத் தொடர்ந்து தூத்துக்குடி யில் மக்கள் வெடி கொளுத்திக் கொண்டாடினர். (ரி1)



## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம் ஒருவர் பலி; 40 பேர் காயம்

மத்திய பிலிப்பைன்ஸில் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளார். நிலநடுத்தால் பலர் காயமடைந்துள்ளனர் என்பதோடு வீடுகள் சேதமாகியுள்ளன.

கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு கட்டடங்கள், பாலங்கள் மற்றும் ஒரு துறைமுகம் சேதமடைந்துள்ளன.

கடலோர நகரமான கேடிங்கனில் மூன்று மாடி வீடு இடிந்து விழுந்துள்ளது. ஓர் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார். நிலநடுக்கத்தால் மஸ்பேட் மாகாணத்தில் 40 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அனர்த்த நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி1)

## பிரேசிலில் காட்டுத் தீயை கட்டுப்படுத்துவதில் சிக்கல்



உலகில் மிகப்பெரிய ஈரவலயமாக கருதப்படுகின்ற பிரேசிலின் பென்டனல் பகுதியில் ஏற்பட்டுள்ள தீயைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது என அறிவிக்கப்படுகின்றது.
பிரேசிலின் அமேசன் வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் பென்டனல் வலயத்திலும் தீ பரவியுள்ளது.
அமேசன் பகுதியில் பரவிவரும் தீயைக் கட்டுப்படுத்த தவறியுள்ளமையினால் பிரேசில் ஜனாதிபதி பொல்சனாறாவுக்கு பல்வேறு தரப்புக்களிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. (ரி1)

## ட்ரம்பின் படகுப் பேரணி சாதனை

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் படகுப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

நியூஜெர்ஸி, டெலவர், அலபாமா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற படகுப் பேரணியில் 2000க்கும் அதிகமான படகுகள் பங்கேற்றன. இதற்கு முன்னர் மலேசியாவில் கடந்த 2014ஆம் ஆண்டு நடத்தப்பட்ட படகுப் பேரணியில் 1180 படகுகள் இடம்பெற்ற நிலையில் தற்போது இச் சாதனையை டொனால்ட் ட்ரம்பின் படகுப்பேரணி முறியடித்து உலக சாதனை படைத்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி1)




## உயர்ந்த உலக வெப்பநிலை சாவுப் பள்ளத்தாக்கில் பதிவு

நியூயோர்க், ஓக.19
தெற்கு கலிபோர்னியாவில் உள்ள சாவுப் பள்ளத்தாக்கு என அழைக்கப்படும் டெத் வேலியில் 100 ஆண்டுகளில் மிக உயர்ந்த உலக வெப்பநிலை நேற்றுப் பதிவாகியுள்ளது.
அமெரிக்க தேசிய வானிலை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், டெத் பள்ளத்தாக்கில் 130 டிகிரி பாரன்ஹீட் (54.4 டிகிரி செல்சியஸ்) ஆக வெப்பநிலை உயர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)





## மீண்டனர் ஹொக்கி வீரர்கள்

புதுடில்லி, ஓக.19

இந்தியக் ஹொக்கி அணி வீரர்கள் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டுள்ளனர். இந்திய ஹொக்கி அணிகளின் தேசிய பயிற்சி முகாம் பெங்களூரி லுள்ள இந்திய விளையாட்டு ஆணைய மையத்தில் (சாய்) இன்று தொடங்குகிறது. இந்தப் பயிற்சி முகாமில் பங்கேற்க இருக்கும் இந்திய அணி வீர, வீராங்கனைகளுக்கு கடந்த வாரம் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில், இந்திய ஆண்கள் ஹொக்கி அணியின் கப்டன் மன்பிரீத் சிங் மற்றும் சுரேந்தர்குமார், ஜஸ்கரன் சிங், வருண்குமார், கிரிஷன் பஹதுர் பதாக், மன்தீப் சிங் ஆகியோ ருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந் தது.

இதனையடுத்து அவர்கள் 6 பேரும் சாய் வளாகத் தில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டது. மன்தீப் சிங்குக்கு இரத்தத்தில் இருக்க வேண்டிய ஒட்சிசன் அளவு வழக்கத்தை விட குறைந்ததை அடுத்து அவர் அங்குள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனை அடுத்து மற்றைய வீரர்களும் அதே மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தற்போது 6 வீரர்களும் கொரோனா பாதிப்பில் இருந்து முழுமையாக மீண்டுள்ளனர். அவர்களுக்கு நடத்தப்பட்ட இரண்டு பரிசோதனைகளிலும் தொற்று இல்லை என்பதை குறிக்கும் வகையில் 'நெகட்டிவ்' என்று முடிவு வந்துள்ளது. இதனால் 6 வீரர்களும் மருத்துவமனையில் இருந்து நேற்று முன்தினம் மாலை விடுவிக்கப்பட்டனர். அவர்கள் சாய் வளாகத்தில் இன்னும் சில நாள்கள் தனிமைப் படுத்தப்பட்ட பின்னர் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ரி2)

# பெர்னாண்டோவுக்கு ஐ.சி.சி. பாராட்டு

கொழும்பு, ஓக.19

கிரிக்கெட்டில் ஊழலை ஒழிக்க முன்னாள் விளையாட் டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேற்கொண்ட முயற்சிகளை சர்வதேச கிரிக்கெட் நிறுவனம் (ஐ.சி. சி) பாராட்டியுள்ளது.

அலெக்ஸ் மார்ஷல் ஐ.சி. சி.யின் ஊழல் தடுப்புப் பிரிவின் தலைவராகக் கடமை களை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், ஐ.சி. சி.யின் ஊழல் தொடர்பான விசாரணைகளில் இலங்கை கிரிக்கெட்டின் நற்பெயர் குறைந்த அளவில் காணப்பட் டிருந்தது. இந்த விசாரணை களைத் தொடர்ந்து பல இலங்கையர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த காலப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தில் நவீன் திஸாநா யக்க, தயாசிறி ஜயசேகர, பைஸர் முஸ்தபா மற்றும் ஹரின் பெர்னாண்டோ போன்ற நால்வர் விளையாட் டுத்துறை அமைச்சராக இருந் துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் இறுதியாக விளையாட்டுத் துறை அமைச்சராகவிருந்த ஹரின் பெர்னாண்டோ விளை யாட்டுத்துறை சட்ட விதிகளுக்கமைய "சூதாட்ட புக்கி உரிமையாளர்கள்", அவ ரது சகோதரர்கள், சகோதரி கள் மற்றும் உறவினர்கள் என எவரும் விளையாட்டுத்துறை சார்ந்த சங்கங்களில் பதவி வகிக்க முடியாது என்று தனது அமைச்சுக் காலத்தில் அறிவித்திருந்தார்.

அத்துடன் விளையாட்டில் ஊழலை ஒரு குற்றமாக மாற்றி, ஊழல் செய்பவர்கள் சிறையில் அடைப்பதற்கான ஆலோசனையையும் முன் வைத்திருந்தார்.

இதனால், விளையாட்டுகளில் ஊழலை சட்டபூர்வமாக்கிய முதல் ஆசிய நாடு இலங்கை என்ற பெருமையைப் பெற் றது. இலங்கையின் இந்த நடவடிக்கைக்கு ஐ.சி.சி. பாராட்டுக்களைத் தெரிவித்தி ருந்தது.

இந்த நிலையில் விளையாட்டுத் துறை அமைச்சராக நியமனம் பெற்றுள்ள நாமல் ராஜபக் ஷவுக்கு டுவிட்டர் பதிவில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ரி2)

# உலக வரலாற்றை மாற்றும் சக்தி படைத்தது புகைப்படம்



இன்று உலக புகைப்பட தினம்

புகைப்படம் என்பது ஒரு "படம்" அல்ல. அது ஒரு "கலை". புகைப்படம், நம் வாழ்க்கையோடு ஒன்றி ணைந்தது. அனைத்து இடங்களிலும், புகைப் படத்தின் பயன் உள்ளது. வரலாற்று நிகழ்வுகள், சமூக பிரச்சினைகள், சுப, துக்க நிகழ்ச்சிகள், மாநாடு, பொதுக்கூட்டம் என வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளையும், நம் கண் முன் கொண்டு வருவது புகைப்படம். ஒரு சந்த தியை, வரும் தலைமுறை யினர் அறிந்து கொள்ள உதவுவதும் புகைப்படம் தான்.

**வரலாறு**

இன்று 175 ஆவது ஆண்டு புகைப் பட தினமாகும். புகைப்படக் கருவியை உருவாக்குவதற்கான முயற்சி 13 ஆவது நூற்றாண்டிலேயே தீவிரமடைந்து விட்டது. அப்போது கேமரா அப்ஸ்குரா என்ற கருவி கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, சிறியதும், பெரியதுமாக பல்வேறு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. மிகப்பெரிய முன்னேற்றம் 1825 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

பிரான்ஸைச் சேர்ந்த ஜோசப் நீப்ஸ் என்பவர் ஒரு கட்டடத்தின் புகைப்படத்தை தனது கருவியில் படம் எடுத்தார். ஆனால், அந்த பிம்பம் 8 மணி நேரத்திற்குப் பிறகு அழிந்துவிட்டது. 1839ஆம் ஆண்டு சேர். ஜோன் ஹெர்செல் என்பவர் கண்ணாடியைப் பயன்படுத்தி நெகட்டிவ்களை எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தார். அவர் தான், இக்கலைக்கு போட்டோகிராபி என்று பெயர் வைத்தார். 19ம் நூற்றாண்டின் துவக்கத்தில் லூகிஸ் டாகுரே என்பவர், "டாகுரி யோடைப்' எனப்படும் புகைப்படத்தின் செயல் பாட்டு முறையை வடிவமைத்தார். 1839ம் ஆண்டு ஜன., 9ஆம் திகதி, பிரான்ஸ் அகாடமி ஒவ் சயின்ஸ், இம்முறைக்கு ஒப்புதல் அளித்தது. ஓக., 19ஆம் திகதி, பிரான்ஸ் அரசு "டாகுரியோடைப்' செயல்பாடுகளை, "ப்ரீ டு தி வேர்ல்ட்' என உலகம் முழுவதும் அறிவித்தது. இதை எடுத்துரைக்கும் வகையில், ஆக., 19 உலக புகைப்பட தினமாக கடைப்பி டிக்கப்படுகிறது.

உலக வரலாற்றை மாற்றும் சக்தி புகைப் படத்திற்கு உண்டு. புகைப்படம் ஒவ்வொரு வரின் வாழ்க்கையோடு ஒன்றி இணைந்துள்ளது.

வரலாற்று நிகழ்வுகள், இன்பம், துன்பம், பொதுக் கூட்டம், தலைவர்கள், அறிவியல் கண்டுபிடிப்பு கள் என அனைத்தையும் நம் கண்முன் கொண்டு வந்து காட்டுகிறது. ஒரு தலைமுறையின் சாதனை களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்காட்டும் ஒரு வழிகாட்டியாக புகைப்படம் விளங்குகிறது. தூரிகையைக் கொண்டு ஒரு படத்தை வரைவதற் குப் பதிலாக மிகத் துல்லி யமாக ஒரே நிமிடத்திற்குள் புகைப்படம் எடுத்து, பல நகல்க ளையும் எடுத்து விடலாம். உள்ளது உள்ளபடியே கேமராவினால் புகைப்படம் எடுக்க முடியும். ஒரு புகைப்படம் என்பது நான்கு பக்கங்களுக்குள் அடங்கி விடுகிறது. ஆனால் அது பல கதைகளை யும், பல தகவல்களையும் கொடுக்கக் கூடியதாக அமைகிறது. இருநூறு பக்கங்கள் எழுத வேண் டிய ஒரு விசயத்தைக்கூட ஒரு புகைப்படம் விளக்கிவிடும். ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கும் ஒரு கருவியாக கேமரா விளங்குகிறது. இந்த கேமராவின் கண்டுபிடிப்பு அறிவியல் வரலாற்றில் ஒரு சாதனையாகும்.

# பயிற்சியாளர் அதிரடி நீக்கம்

புதுடில்லி, ஓக.19

பார்சிலோனா அணியின் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து குயிக் சேட்டின் நேற்று முன்தினம் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். ஸ்பெயினின் பிரபல கால்பந்து கழகமான பார்சிலோனா அணியின் தலைமைப் பயிற்சியாளராக ஸ்பெயின் முன்னாள் வீரர் குயிக் சேட்டின் கடந்த 7 மாதங்களாக பணியாற்றி வந்தார். சில தினங்களுக்கு முன்பு நடந்த ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் கால்இறுதிச் சுற்றில் பார்சிலோனா அணி 2:8 என்ற கோல் கணக்கில் பேயர்ன் முனிச் அணியி டம் பணிந்தது. கடந்த 74 ஆண்டுகளில் பார்சிலோனா அணியின் மோசமான தோல்வியாக இது அமைந்ததையடுத்து பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து குயிக் சேட்டின் அதிரடியாக நீக்கப்பட்டார்.

புதிய பயிற்சியாளராக நெதர்லாந்து முன் னாள் வீரர் 57 வயதான ரொனால்ட் கோமேன் நியமிக்கப்படுகிறார். தற்போது நெதர்லாந்து அணியின் தலைமை பயிற்சி யாளராக உள்ள ரொனால்ட் கோமேன் அந்த பொறுப்பிலிருந்து விலகுகிறார். பார்சிலோனா பயிற்சியாளர் பொறுப்பை ஏற்பதற்கு முன் ரொனால்டு கோமேன் சில நிபந்தனைகளை விதித்துள்ளார். 2020-2021 ஆம் ஆண்டு கால்பந்து சீசனுக்கு குறிப்பிட்ட சில புதிய வீரர்களை ஒப்பந்தம் செய்ய வேண்டும், மூத்த வீரர் லூயிஸ் சுவாரஸை கழற்றி விட வேண்டும் என்று அவர் கூறி யுள்ளதாக தெரிகிறது. இதற்கிடையே, பார்சிலோனா நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி அந்த அணியை விட்டு விலக விரும்புவதாக மீண்டும் தகவல்கள் வெளி யாகியுள்ளன. (ரி2)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 19.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.